**செய்தி வெளியீடு எண்:284** **நாள்:16.06.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுதுறை அமைச்சர் அவர்கள் வணிகவரித்துறை அலுவலர்களின் முதல் ஆய்வு கூட்டத்தை இன்று (16.06.2021) காலை 11.30 மணி அளவில் சென்னை 35, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அலுவலக கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் நடத்தினார். அரசு செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை மற்றும் முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களும் உடன் இருந்தனர். அனைத்து கூடுதல் மற்றும் இணை ஆணையர்கள் இந்த ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வணிகர் நலவாரியத்தில் பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் வணிகர்களின் நீண்ட நாள் கோரிக்கையான இணையவழி பதிவுசெய்யும் முறையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். இதன்மூலம் வணிகர்கள் இனிவரும் காலங்களில் TWB-ல் உறுப்பினராக சேர இணையவழி மூலம் பதிவு செய்து பெறலாம். இந்த ஆய்வு கூட்டத்தின் போது வணிகர் நல வாரியம் சிறப்பாக செயல்பட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்

வணிகவரி துறையானது அரசுக்கு வருவாய் ஈட்டுவதில் முதல் மற்றும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே அனைத்து அலுவலர்களும் சிறப்பாக பங்காற்றி அரசிற்கு வருவாய் ஈட்டி தரவேண்டுமென கேட்டுகொண்டார்.

வரிவசூல் செய்வதில் வணிகர்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாதவாறு அலுவலர்கள் செயல்பட வேண்டும் எனவும், துறையின் செயல்பாடு வணிகர்களை சிறப்பாக வணிகம் செய்ய ஊக்குவிக்கும் விதமாகவும் இருக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மேலும் வணிகவரி சட்டங்களை நிர்வகிக்கும் போது, நேர்மையான மற்றும் சரியான முறையில் வரிசெலுத்தும் வணிக நிறுவனங்களை நெருக்கடி செய்யாமல் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும் வணிகவரி துறையில் செயல்படும் நுண்ணறிவு பிரிவு அலுவலர்கள் சிறப்பாகவும் நேர்மையுடனும் செயல்பட வேண்டும் என கூறினார். தற்போது நுண்ணறிவு பிரிவு என்பது வணிகர்கள் தாக்கல் செய்யும் நமூனாக்கள் மற்றும் விவரங்களை மட்டுமே கொண்டு செயல்படுகின்றன. ஆனால் இனிவரும் காலங்களில் வரிஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மற்றும் Bill Trader போன்ற விபரங்களை நுண்ணறிவு மூலம் துல்லியமாக கண்டுபிடித்து, அவர்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அறிவுறுத்தினார்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**